சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அசல் வழக்கு எண் : 55/2024

நாள் : 26.02.2026

வா.சா. : 1

பெயர் : செந்தில்நாதன்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

14.07.1972ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையின்படி என் அப்பாவிற்கு E ஷெட்யூல் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். B ஷெட்யூல் என்று சொன்னால் அது தவறு. E ஷெட்யூல் படி ஒரு ஏக்கர் இருபத்து நான்கு 3/4 செண்ட் என்றால் சரிதான். அந்த சொத்துக்களை நான் தாவா வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரி அதை விற்றுவிட்டார்கள். எந்த வருடம் யாரிடம் எவ்வளவுக்கு விற்றார்கள் என்பதற்கு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த சொத்து என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட தனிப்பட்ட சொத்து என்பதால் அதை முப்பது வருடங்களுக்கு முன்பே விற்றுவிட்டார் என்றால் சரியல்ல. அந்த சொத்தை விற்று தான் தாவா சொத்தை வாங்கினார் என்று சாட்சி சொல்கிறார். நான் எவ்வித ஆவணமும் இல்லாமல் பூர்வீக சொத்தை விற்று தாவா சொத்தை வாங்கியதாக பொய் கட்சி ஆடுகிறேன் என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்யும் காலத்திலும் அதற்கு முன்பாகவும் பூர்வீக சொத்து என்று எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பூர்வீக சொத்தை விற்று தாவா சொத்தை வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாசாஆ 1 முதல் வாசாஆ 31 வரையான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் அனைத்தும் என் தகப்பனார் பெயரிலும்

S. Sen

தான் உள்ளது என்றாலும் ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகள் தான் அந்த சொத்தின் உரிமையாளர்கள் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தின் கூட்டு உரிமையாளர் என்பதை காட்டும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இரண்டு முதல் பதினான்கு வரையான தாவா சொத்துக்கள் என் அப்பா பெயரில் உள்ளது என்றால் சரிதான். பதினைந்து முதல் பத்தொன்பது வரையான சொத்துகள் இரண்டாம் பிரதிவாதியான என் அம்மா பெயரில் உள்ளது என்றால் சரிதான். 1, 2 பிரதிவதிகளுக்கு சொந்தமான தாவா சொத்துக்களை மூன்றாம் பிரதிவாதியான் என் தங்கைக்கு தாவா ஆறு முதல் பத்தொன்பது ஐட்ட சொத்துக்களை எழுதி வைத்தார்கள் என்றால் சரிதான். தாவா ஒன்று முதல் ஐந்து சொத்து ஒன்றாம் பிரதிவாதியின் தனிப்பட்ட அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் கூட்டு உரிமையாளர் என்றபட்சத்தில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் அல்ல என்பதால் தாவா சொத்தில் எனக்கு எந்த பாகமும் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. என் அப்பா ஆசிரியராக முப்பத்து ஐந்து வருடங்களாக பணியுரிந்து 2006ம் ஆம் ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். அவர் வருமானத்தை கொண்டு என்னென்ன சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று என்னால் இப்போது சொல்லமுடியாது. என் அப்பாவின் ஓய்வு கால பணிச்சலுகைகள் ரூபாய் முப்பது லட்சம் இருக்குமென்றால் அது எனக்கு தெரியாது. என் அப்பாவின் பெயரில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் அவர் வருமானத்திலும் பணி ஓய்வு பெற்று கிடைக்கப்பெற்ற பணப்பலன்களை கொண்டு வாங்கப்பட்டவை என்றால் சரியல்ல. இரண்டு முதல் பதினான்கு ஐட்ட சொத்துக்கள் என் அப்பாவின் வருமானத்தை

S.Sel

கொண்டு வாங்கப்பட்டவை என்றால் சரியல்ல என் அம்மா பெயரில் உள்ள பதினைந்து முதல் பத்தொன்பது ஐட்ட சொத்துக்கள் உள்ளன என்றால் தற்போது அது என் சகோதரி மூன்றாம் பிரதிவாதி பெயரில் உள்ளது. இரண்டாவது பெயரில் 22.05.2006ல் ரெங்கப்பா என்ற பெயரிலும் 28.02.2007ல் ராஜாராம் பெயரிலும் 01.03.2007ல் பாஸ்கர் என்பவர் பெயரிலும் கிரயம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் தாயார் சொந்த ஊர் நாங்கூர் கிராமமாகும். என் தாய்வழி பாட்டனார் வெங்கடாசல முதலியார் என்றால் சரிதான். அவருக்கு இரண்டு மகள்கள் என்றால் சரிதான். அவருக்கு அந்த ஊரில் நிறைய சொத்துகள் இருந்தது ஆனால் அது எனக்கு தெரியாது. நாங்கூரில் உள்ள என் தாயாருக்கு சொந்தமான சொத்துக்களை விற்று தான் தாவா பதினைந்து முதல் பத்தொன்பது ஐட்ட சொத்துக்கள் கிரயம் பெறப்பட்டவை என்றால் சரியல்ல. என் அம்மா கறவை மாடு வைத்து மாதம் பத்தாயிரம் வருமானம் தரக்கூடிய வேலை செய்தார் என்றால் சரியல்ல. என் தாயாருக்கு சொந்தமான சொத்துக்களில் நான் பாகம் கோருகிறேன் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு உடல்நலம் பாதிக்கப்பட்டு நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். பதினைந்து வருடங்களாக நீரிழிவு நோய்க்கு சிகிச்சை பெற்று வருகிறார் என்றால் சரிதான். என் அம்மா இரண்டு சிறுநீரகமும் பாதிக்கப்பட்டு சிகிச்சையில் உள்ளார் என்றால் சரிதான். கர்ப்பை அகற்றப்பட்டு சிகிச்சையில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். அதற்கான மருத்துவசெலவு பத்து. பதினைந்து லட்சம் என்றால் சரியல்ல. ஒரு ஐந்து லட்சம் செலவாகியிருக்கும். மூன்றாம் பிரதிவாதி தான் அந்த மருத்துவ செலவுகள் மற்றும் அவர்களை பராமரித்து வருகிறார்கள் என்றால்

S. Selva

சரியல்ல. எனக்கும் என் மனைவிக்கும் எந்த வருமானமும் இல்லை என்றால் சரியல்ல. என் பெற்றோரை இதுநாள் வரை பாராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா 2003ல் பணிஓய்வு பெற்றார் என்றால் சரி. தாவா ஒன்றாம் ஐட்ட சொத்தில் மாடி வீடு உள்ளது அது இரண்டு செண்ட். அது கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கி கட்டப்பட்டது என்றால் சரிதான். அந்த கடனை என் அப்பா தான் கட்டி முடித்தார் என்றால் சரிதான். மூன்றாவது பிரதிவாதி என் அப்பா செட்டில்மெண்ட் செய்து கொடுத்த சொத்தில் ஒரு பத்து வருடத்திற்கு முன்பே வீடு கட்டிவிட்டார். அதற்கு ஸ்டேட் பேங்கில் கடன் வாங்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த செட்டில்மெண்ட் எழுதப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. இரண்டு முதல் ஐந்து ஐட்ட சொத்துகள் தான் என் தகப்பனார் பெயரில் உள்ளது என்றாலும் அதை அவர் விருப்பத்தின்பேரில் எழுதிவைத்தால் தான் எனக்கு பாகம் என்றால் சரியல்ல. மற்ற சொத்துக்களை பொறுத்து எனக்கு பாகம் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பாகவீதம் பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

S. Sun

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

24/4/24

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை